## ‘வெங்கொடுமை ஆட்சியின் விதிமுடிப்போம்’ என

# தமிழ்நாடெங்கும் திரண்டு கழகத்தினர் ஆர்ப்பாட்டம் - கைது!



திருச்சியில் மாநகரச் செயலாளர் – மேயர் அன்பழகன் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கைதாகி சிறை சென்றனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களைக் கைது செய்ததை கண்டித்து நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் பழைய பேருந்து நிலையம் மணிக்கூண்டு அருகே மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநகராட்சி துணை மேயர் பூபதி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட 60 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீது பொய் வழக்கு தொடுத்து கைது செய்துள்ள த.வெ.க அரசை கண்டித்து தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், டி.கே.ஜி.நீலமேகம், இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சாலை மறியல் செய்தனர். இதில் கழக நிர்வாகிகள் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதைக் கண்டித்து தென்காசியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மறியலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதைக் கண்டித்து காரைக்கால் மாநில தி.மு.க. அமைப்பாளரும் புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எ.எம்.எச் நாஜிம் தலைமையில் காரைக்காலில் தி.மு.க. நிர்வாகிகள் முக்கிய வீதியான பாரதியார் வீதியில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததைக் கண்டித்து நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் புதிய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகே நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது நடவடிக்கையை கண்டித்து திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் மேயர், மாவட்ட கழக பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து பேரணியை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். இதில் திருப்பூர் வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த கையலாகாத தவெக அரசை கண்டித்து, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், தியாகதுருகம் வடக்கு, தெற்கு & பேரூர் கழகம், சின்னசேலம் தெற்கு, கிழக்கு ஒன்றியம், ரிஷிவந்தியம் வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றியம், திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியம், மணலூர்பேட்டை பேரூர் கழகம் சார்பில் பல்வேறு இடங்களில் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைதுக்கு கண்டனம் தெரிவித்து பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திருப்புவனத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் சேங்கைமாறன் தலைமையில் 100 க்கு மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.